



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உழவு

பிறந்ததின
குடும்ப
ஆவண இதழ்.

1995 ஆடி

பெயர் :
**லெனிதன்.**

பிறந்தநாள் :
**24. 07. 1994**

பெற்றோர் :
திலகராசா
கிரிஜா

வெளியீடு :
நா. திலகராசா


தொடர்பு முகவரி :
N. Thilagarajah
See Str. 23
8596 Scherzingem
Switzerland.
3, Hite land str


# மறு உழவு

அனைத்து நியாயமான செயற்பாடுகள், கருத்துக்கள் நிலைக்கவேண்டுமென்கிற தேவைக்காக அதற்கான முன்னெடுப்பில் ஏற்பட்டுவிடும் தற்காலிகமான சரிவுகளால் சோர்ந்துவிடாதே என்பதை கவிஞர் கி. பி. அரவிந்தன் இவ்வாறு சொல்கிறார்.

"உழு
மறுத்துழு
மீளவும், மீளவும்
பண்படும் நிலம்"

எனவே சமூகத்தில் பிறக்கும் குழந்தைகளை சமூகம் சார்ந்து நியாயமான தேவையின் அடிப்படையில் எழுந்து நிற்கும் கருத்துக்களுக்கு துணையாகக் கூடியவர்களாக வளர்த்தெடுக்க வேண்டுமென்ற அடிப்படையில்தான் "மறு உழவு" என்ற பிறந்ததின ஆவண இதழ் வெளியிடுவது பற்றிய எண்ணம் தோன்றியது.

குழந்தையின் பிறப்பையொட்டி "சாதகம்" என்னும் எதிர்கால வாழ்நிலைக் குறிப்பை சாத்திரிகளும், பிராமணர்களும் பணம் பெற்று எழுதிக்கொடுக்கிறார்கள். எம் சமூகத்தில் தப்பாமல் ஒவ்வொரு வீட்டுக்கும், எல்லாப் பிள்ளைகளுக்கும் அது பூர்த்தியாக்கப்படுகிறது. சாகும் வரையும் பாதுகாக்கவும்படுகிறது. இச் சாதகக் குறிப்பானது தன்பாட்டைதான் எப்படியும் பார்த்துக் கொள்ளலாம் என்ற பொருளாதார நிலையால் வாழ்க்கையில் தனிமனிதன் ஒருவன் எதிர்நோக்கும் பல்வேறு விதமான பிரச்சனைகளுக்கு நட்சத்திரங்களையும், இராசி, இலக்கங்களையும் கணக்குப்போட்டு இச்சமூகமானது நேர்மையாகத்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேர்மையாகத்தான் செல்கிறது. உங்கள் பலன்தான் தரித்திரம் பிடித்தவர்களாக மாற்றுகிறது, என்ற அறிவியலுக்கு புறம்பான கருத்தை சாதுரியமாக திணிக்கிறது.

நில பிரபுத்துவ காலம் தொட்டு இன்றுவரை ஆட்சியாளரின் அடிவருடிகளாக சேவகம் செய்யும் மதசார் புரோகிதர்கள்தான் இச்சாதக உருவாக்கத்தின் சங்கராச்சாரியர்கள்.
எம் சமூகத்தில் பிறந்த குழந்தைக்கு எழுதப்படும் சாதகம் இம் மோசடியான கருத்தை சிறுபராயத்தில் இருந்து திணிக்கிறது என்பதை சுட்டிக்காட்டலாம்.

எனவே கிணறு தோண்டும் நாம் ஊற்றுக்கண்ணைச் சுற்றியிருக்கும் அழுக்குகளையும் அப்புறப்படுத்த வேண்டும். அதில்தான் நல்லநீர் பருகமுடியும் என்பது யதார்த்தம்.
அதனால்தான் இம்மூடத்தனமான கருத்துக்கள் விமர்சிக்கப்பட்டு அவசியமானவேளையில் செயல்வடிவம் பெறவேண்டும்.

வெறுமனே கேளிக்கை நிகழ்வாக ஆக்கப்பட்டிருக்கும் பிறந்தநாள் நிகழ்வை இவ்வெளியீடுமூலமாக ஒரு புதியகலாச்சாரமாக வெளிக்கொணர்வதும் குழந்தையின் வளர்ச்சிக்காலங்களில் முற்போக்கான கருத்துக்களை செவிமடுத்து, அவதானித்து புதியசிந்தனை பெறச்செய்வதும், பெற்றோர்களிடமும் இவ்வகையான முற்போக்கு கருத்துக்களை கொண்டுசெல்வதும் இவ்வெளியீட்டின் முக்கிய நோக்கமாகும்.

இவ் இதழை வெளியிடுவதற்கான சில ஒழுங்குகளை இவ்வாறு பேணலாம் என நினைக்கிறேன்.

அ. குழந்தை பிறந்து முதலாம் ஆண்டில் "மறு உழவு" இதழை வெளியிடுதல்.

ஆ. குடும்பத்தில் எல்லாப் பிள்ளைகளுக்கும் "மறுஉழவு" இதழைத் தயாரித்து வெளியிடல்.
இ. முற்போக்கு சிந்தனையான எழுத்தாளரின் பங்கை அவசியமாக்கல்.
ஈ. இதற்கான நிதிவசதியை நண்பர்கள் , சுற்றத்தார் போன்றவர்களிடமிருந்து அன்பளிப்பாகப் பெறல் , ஆகக் குறைந்தது கையெழுத்துப் பிரதியைத்தானும் வெளியிடல்.
உ. முதலாம் ஆண்டில் இவ்வெளியீடும், தொடரும் ஏனைய பிறந்தநாட்களில் இவ்வெளியீடு பற்றி பகிர்வையும், புதிய கருத்துக்களையும் பரிமாறிக்கொள்ளல்.

எண்ணம் ஒன்று செயல்வடிவம் பெறுகிறது. இம் "மறு உழவு" பற்றிய வளமான கருத்துக்கள் வெளிவரவேண்டும். அதனூடாகத்தான் இதன் நடைமுறை சாத்தியம். இதுதாங்கி நிற்கும் கருத்துக்கள் பற்றியெல்லாம் தெளிவுபெற முடியும்.
- நாகதிலகன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெற்றோர்களும் பிள்ளைகளும்....

## லண்டனிலிருந்து ஒரு பார்வை !

வெளிநாடுகளில் அந்நிய மண்ணை புகலிடமாக்கி லட்சக்கணக்கான தமிழ்பேசும் மக்கள் வாழும் இந்தக் காலகட்டத்தில் அவர்கள் பலவிதமான பிரச்சனைகளை எதிர்நோக்குகிறார்கள். அவற்றில் முக்கியமான ஒன்று இந்த அந்நியச் சூழலில் தமது எதிர்காலச் சந்ததியினரான பிள்ளைகளை எப்படி வளர்த்தெடுப்பது என்பது. இந்த விடயத்தில் குறிப்பாக பிரித்தானியாவில் வாழும் தமிழர்களது நிலை பற்றி இங்கு கவனிப்போம்.

பிரிட்டனில் உள்ள சமூகப் பொருளாதாரப் பின்னணியை விளங்கிக்கொண்டால்தான், இப்பின்னணியில் வாழும் எம்மவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சனைகளும் தெளிவாகும். இங்கு பிறக்கும் ஒவ்வொரு குழந்தைக்கும் 15 வயது வரை பராமரிப்புக்கென ஒரு குறிப்பிட்ட தொகைப் பணத்தை அரசாங்கம் வழங்குகிறது. அத்துடன் சிறுவயது முதல் பிள்ளைகளை அடிப்பது போன்ற வன்முறைகளை பெற்றோர் கையாள முடியாது. குழந்தைகளை ஒழுங்காக வளர்ப்பதற்கு பெற்றொர்கள் தவறுகிறார்கள் என்று கண்டுபிடிக்கப்படுமானால், அவர்கள் பிரிக்கப்பட்டு ஒரு வளர்ப்புப் பெற்றோரிடம் கொடுக்கப்பட்டு விடுவார்கள். பதினைந்து வயதின் பின் பிள்ளை (மகன் அல்லது மகள்) முழு நேரமாக வேலை செய்ய ஆரம்பிக்கலாம். பாடசாலை செல்லும்படி கூட பிள்ளைகளை பெற்றோர் கட்டாயப்படுத்தமுடியாது. கட்டாயப்படுத்தியதாக புகார் செய்யப்பட்டால் நீதிமன்றத்தில் தண்டப்பணம் கட்டவேண்டிய நிலையும் ஏற்படும். இவையெல்லாம் சட்டம், ஒழுங்கு சம்பந்தப்பட்ட பிரச்சனைகள். இதேபோல மொழி, கல்வி, பழக்கவழக்கங்கள், இனவாதம் என பலவகைப்பட்ட விடயங்களை தொடர்ந்து பார்க்கலாம்.

இங்கு வாழும் தமிழர்களை பதினைந்து, இருபது வருடங்களாக இங்கு பிரஜா உரிமை அல்லது வதிவிட உரிமை பெற்று வாழ்பவர்கள், 85, 90 களின் பின் அகதிகளாக வந்து தற்காலிக வதிவிட உரிமை பெற்று வாழ்பவர்கள் என இரு வகையாகப் பிரிக்கலாம். இந்த இரு தரப்புப் பெற்றோருமே தமது பிள்ளைகளை நன்றாகப் படிக்கவைக்கவேண்டும் என்பதையே குறிக்கோளாகக் கொண்டுள்ளார்கள். நீண்டகாலமாக இங்கு வாழ்பவர்கள் பொருளாதார விடயத்தில் நன்கு காலூன்றி விட்டபடியால் வசதியான பகுதிகளில் வீடுகளை வாங்கி வசிப்பதுடன், தமது பிள்ளைகளை அதிக செலவு செய்து தனியார் பாடசாலைகளில் கல்வி பயிலச் செய்கிறார்கள். 85 களின் பின் வந்தவர்களில் சிலர் அவ்வாறு இருப்பினும், அநேகமானோர் மிகவும் கஸ்ரப்பட்டு ரியூஷன் வசதிகளை பிள்ளைகளுக்கு ஏற்படுத்தி படிக்க வைக்கிறார்கள். கல்வி கற்க வேண்டிய வயதில் குடும்ப நிலை காரணமாக குறைந்த கூலி கொடுக்கப்படும் வேலைகளுக்குக் கூட செல்லும் இளம்பருவத்தினரும் உள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கு தேசியமொழி ஆங்கிலமாக இருப்பது எம்மவருக்கு ஒரு வகையில் நன்மையளிக்கிறது. ஏனெனில் ஓரளவு அடிப்படை ஆங்கில அறிவு பலருக்கு உண்டு. அதேவேளை அனேகர் தமது பிள்ளைகளை "தமிழ் தெரியாதவர்களாக வளர்த்து வைத்திருப்பது கவலை தருவதாக உள்ளது. தமது அதிக நேரத்தை பாடசாலையில் ஆங்கிலம் பேசும் சக மாணவர்களுடன் கழித்து, ஆங்கில மொழியில் கல்வி கற்கும் பிள்ளைகள் ஆங்கிலத்தை அதிகம் கற்றுக்கொள்வது இயல்பானதே. அதேவேளை பெற்றோர்களும் வீட்டிலும் ஆங்கிலத்தில் பேசுவதை பெருமையாகக் கொள்வதால் மேற்கூறிய நிலை ஏற்படுகிறது. தமிழ் கற்பிப்பதற்கென்று ஆங்காங்கே தமிழ்ப்பாடசாலைகள் உருவாகியுள்ளன. தமது பிள்ளைகள் தாய்மொழியை கற்கவேண்டுமென்றும், இங்குள்ள ஏனைய தமிழர்களுடன் தொடர்பும், நட்பும் ஏற்படவேண்டுமென்றும் விரும்பும் பெற்றோர்கள் பகுதி நேரமாக அங்கே பிள்ளைகளை அனுப்புகின்றனர்.

பாடசாலை மாணவர்கள் மத்தியில் போதைவஸ்து பாவனை என்பது இங்கு அதிகரித்து வரும் ஒரு பிரச்சனையாக உள்ளது. அத்துடன் இங்குள்ள சமூக சூழ்நிலை காரணமாக மிக சிறு வயதிலேயே பாலியல் கல்வி(Sexual Education) மாணவர்களுக்கு வழங்கப்படுகின்றது. இந்நிலையில் தனியார் பாடசாலைகளைவிட அரச பாடசாலைகளில் சில இடங்களில் கல்வித்தரமும், மாணவர்களின் நடத்தைத்தரமும் மிகவும் குறைவாகக் காணப்படுகிறது. இப்படிப்பட்ட சூழலில் கல்வி கற்கும் பிள்ளைகளின் படிப்பிலும், அவர்கள் பழக்கவழக்கங்களை ஒழுங்குபடுத்துவதிலும் பெற்றோர்கள் அதிக கவனம் செலுத்தவேண்டியுள்ளது.

பொருளாதாரத்திற்காக பெற்றோர்கள் இருவரும் வேலைக்குப் போய் விடுகின்ற நிலையில், காலநிலை, மற்றும் அந்நிய சுற்றாடல் காரணமாக பிள்ளைகள் வீட்டில் அதிக நேரத்தை தொலைக்காட்சியின் (T. V) முன்னாலும், கம்பியூட்டர் விளையாட்டுக்களிலும் செலவிட முனைகிறார்கள். இது உடல், உள ஆரோக்கியத்திற்கு நல்லதல்ல. சிறுவர்கள் இவ்வாறு அதிக நேரத்தை செலவிடுவதால் மூளையின் செயற்பாட்டைவிட, உடலின் செயற்பாடுகள் (Physical Activities) குறைவதால் இருதய நோய்கள் ஏற்பட காரணமாகிறது என மருத்துவ விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளார்கள்.
அடுத்து பெற்றோர்கள் குறிப்பாகத் தாய்மார்கள் வீட்டுவேலைகளை பிள்ளைகளுடன் பகிர்ந்துகொள்ளாமல் தாமே எல்லாவற்றையும் செய்வதால் அவர்களின் வேலைப்பழு வீட்டில் அதிகரிப்பதுடன், பிள்ளைகளும் அத்தகைய வேலைகளின் பெறுமதியும், பொறுப்பும் அறியாது வளர்கிறார்கள்.
அந்நிய நாடுகளில், அந்நியப்பட்ட சூழல்களில் வாழுகின்ற நாம் எமது தனித்தன்மைகளை பேணிக்கொள்கின்ற அதேவேளையில், நாம் வாழுகின்ற சூழலிலுள்ள ஆரோக்கியமான விடயங்களை உள்வாங்கிக்கொள்ளவும் வேண்டும். பிள்ளைகள் வளர்கின்ற போது, அவர்கள் வளரும் சூழலை மனதிற்கொண்டு அவர்களது நடவடிக்கைகளை விளங்கிக் கொள்ளவேண்டும். பிள்ளைகளுடனான உறவை அதிகாரத் தோரணையுடன் இல்லாமல் நட்பார்ந்த முறையில் வளர்த்துக் கொள்வது அவசியம். அப்போதுதான் தமக்குரிய பிரச்சனைகளை பெற்றோர்கள் புரிந்துகொள்வார்கள் என்ற வகையில் பகிர்ந்து கொள்ள முன்வருவார்கள். இருதரப்பினரும் பரஸ்பரம் புரிந்துகொள்ளலை வளர்க்க இது மிக அவசியம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளைகள் எழுப்புகின்ற பல்வேறுபட்ட கேள்விகளுக்கும் இயன்றளவு அறிவுபூர்வமாக சிந்திக்கத்தூண்டுகின்ற விளக்கங்களையும், பதில்களையும் அளிக்கவேண்டும். அதைச்செய்யாதே, இதைச்செய்யாதே என்று தடுப்பதை விட, அவற்றினால் வரும் விளைவுகளை எடுத்துவிளக்குவதன் மூலம் அவர்களாகவே அவற்றைத் தவிர்ப்பதை ஊக்குவிக்கவேண்டும். அத்துடன் பிள்ளைகளின் இயல்பான திறமை, ஆர்வம் என்பவற்றிற்கு ஏற்ப அவர்களின் எதிர்கால குறிக்கோள்கள் பற்றிய முடிவை அவர்களே எடுப்பதற்கு உதவவேண்டும். இவற்றின் மூலம்சிறுவயது முதலேபயத்தின் அடிப்டையிலோ, கண்மூடித்தனமான நம்பிக்கைகளின் அடிப்படையிலோ இல்லாமல் எதையும் பகுத்தறிந்து பார்த்து செயற்படப் பழகுவார்கள்.
தாய் மொழியையும், தாய்நாட்டையும் எமது எதிர்கால சந்ததியினர் மறந்து அந்நிய வாழ்வு வாழ்வதை தவிர்ப்பதற்கு அவசியம் பிள்ளைகளுக்கு தமிழ்மொழிக்கல்வியை அளிக்க முயற்சிக்கவேண்டும். அத்துடன் எமது உழவர் தினமான பொங்கல்தினம், திருவள்ளுவரால் கணிக்கப்பட்ட புதுவருடதினம் போன்ற வரலாற்று ரீதியான பண்டிகைகளை கொண்டாடலாம். அத்துடன் எம்மவர் மத்தியில் அறிவியல், கலை, இலக்கிய வெளியீடுகள் மற்றும் இசை, நடனம் நாடகம், நாட்டுக்கூத்து போன்ற கலைவடிவங்கள் ஊக்குவிக்கப்படவேண்டும். பிரிட்டனில் பொப் இசை இளம்பிராயத்தினர் மத்தியில் மனச்சோர்வை (Depression) ஏற்படுத்தும் ஒரு முக்கிய காரணி என ஆய்வாளர்கள் கண்டுபிடித்துள்ளார்கள். எனவே நாமும் இத்தகைய மேற்கத்தைய சீரழிவுகளில் சிக்காமல் ஆரோக்கியமான கலை இலக்கிய வடிவங்களை எமது எதிர்கால சந்ததியினருக்கு அறிமுகப்படுத்துவது நல்லது.

அத்துடன் பொதுவாகவே இங்குள்ள வெள்ளையரல்லாதோரையும், வெளிநாட்டவரையும் இரண்டாம் தரப் பிரஜைகளாக நோக்கும் போக்கு மறைமுகமாகக் காணப்பட்டாலும், சில பகுதிகளில் அது வெளிப்படையான எதிர்ப்பாக வளர்ந்துள்ளது. பாடசாலை மாணவர்கள் மத்தியிலும் இது காணப்படுவதாக அறியமுடிகிறது. எனவே இதுபற்றிய விழிப்புணர்வை எம்பிள்ளைகள் மத்தியில் ஏற்படுத்தவேண்டும்.

கல்வியில் மட்டுமல்லாமல், விளையாட்டு மற்றும் அவர்களுக்கு விருப்பமான துறைகளில் அவர்களது தன்னியல்பான திறமைகள் வெளிவருவதற்கு ஊக்குவிக்க வேண்டும். அதேவேளை குடும்பம் என்ற அடிப்படையில் வீட்டு வேலைகள் தனியாக தாய்க்கோ, தந்தைக்கோ மட்டும் உரியவையல்ல. அவை பிள்ளைகளுடனும் பகிரப்படவேண்டும். அத்துடன் அவர்களின் ஓய்வு நேரங்கள், விடுமுறைக்காலங்களில் திட்டமிட்ட அடிப்படையில் பூங்காக்களுக்கோ, பொதுநிகழ்ச்சிகளுக்கோ அல்லது சுற்றுலாபோல வெளிஇடங்களுக்கோ அழைத்துச்செல்லலாம். இவற்றின் மூலம் பிள்ளைகள் வீட்டில் வெறுமனே தொலைக்காட்சி, கம்பியூட்டர் விளையாட்டுகளில் அதிக நேரம் கழிப்பதைத் தவிர்க்கலாம்.

இவ்வாறாக நல்லவழிகாட்டிகளாக, நண்பர்களாக பெற்றோர்கள் இருப்பதன் மூலமே அந்நியமண்ணிலும் கூட தன்னம்பிக்கையும், தெளிந்த சிந்தனையும், செயற்பாட்டுத்திறனும் கொண்டவர்களாக தமது பிள்ளைகளை வளர்த்தெடுக்கமுடியும்.

லண்டன்.
6. 5. 95.

- பிரியா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கார்ல் சேகன்

# ஒரு விஞ்ஞானி எச்சரிக்கிறார்:

# ஏமாறாதே!

**கார்ல்** சேகன் விண்வெளி இயல் அறிஞர்; நியூஸிலாந்தில் பேராசிரியர். 'காஸ்மாஸ் - பிரபஞ்சம்' என்ற தலைப்பில் வியப்பூட்டும் வண்ணம் அண்டவெளி அறிவியலை எளிமையான நூலாக எழுதி உலக மக்களிடையே பரப்பியவர். அமெரிக்கா, அர்ஜென்டினா இரண்டு இடங்களிலும் விண்கோள் ஆய்வுகளை விடாப்பிடியாக நடத்தி வருகிறார். இதற்கான செலவுகளுக்கு அரசிடமிருந்து நிதிபெறவில்லை; மக்களிடமிருந்து நேரடியாக சுமார் ரூ 125,250 (5, 10, 15 டாலர்) நன்கொடை வசூலித்து ஆய்வுகளும் செய்கிறது இவர் அமைத்துள்ள ஆய்வுக் கழகம்.

அண்மையில் இந்தியா வந்த போது அவர் ஜயந்த் நார்லிகா என்ற இந்திய விஞ்ஞானிக்கு பேட்டி அளித்தார். லட்சக்கணக்கில் காசு செலவழித்து கோடிக்கணக்கில் கொள்ளை அடிக்க மூடக் கருத்துக்களைப் பரப்பி வருபவர்களுக்கு எதிராக அவர் தொடர்ந்து போரிட்டு வருகிறார்.

*(பேட்டி: இந்தியன் எக்ஸ்பிரஸ், 1.3.'92.)*

**கேள்வி:** *விண் இயல் சம்பந்தமாக நான் எப்போது கூட்டத்தில் பேசினாலும், கூட்டத்தின் கடைசியில் சில கேள்விகள் கேட்கிறார்கள். சிலர் பேச்சை ஒட்டி கேள்விகள் கேட்பார்கள். இன்னும் சிலர், நான் எந்த தலைப்பில் பேசினாலும், அதற்குச் சம்பந்தமேயில்லாத முறையில் பறக்கும் தட்டுகள் பற்றி கேட்கிறார்கள். அல்லது பெர்முடா முக்கோணம் பற்றி கேட்கிறார்கள். உங்களிடமும் அப்படிப்பட்ட கேள்விகளைக் கேட்பார்களென்று நான் கருதுகிறேன். நீங்கள் இதற்கு என்ன பதில் சொல்வீர்கள்?*

**பதில்:** இந்தியாவுக்கு இப்போது வந்து சேர்ந்தபோது ஒருவர் எனக்குத் தகவல் சொன்னார் "என்னிடம் பறக்கும் தட்டு இருக்கிறது. பார்க்க வருவீர்களா?"

**கேள்வி:** *ஓ, அப்படியா, இன்னமும் அது இருக்கிறதா?*

**பதில்:** அவர் சொன்ன விவரத்திலிருந்து பார்த்தால் அது அவரிடம் இருக்கிறது. இதோ பாருங்கள், இவற்றுக்கு என்னால் வேகமாகப் பதில் சொல்ல முடியும்.

பெர்முடா முக்கோணம்: அட்லாண்டிக் கடலில், பெர்முடா தீவின் அருகே ஓர் இடம். அங்கே விமானங்களும், கப்பல்களும் விபரீதமாகக் காணாமல் போய் விடுகின்றன என்கிறார்கள்.

இது சம்பந்தப்பட்ட முதல் உண்மை, தண்ணீரில் ஒரு பொருள் மூழ்கிப் போவது - இது மிகச் சாதாரண பௌதீக நிகழ்வு. காணாமல் போகிற ரயில்களோடு இதை நான் ஒப்பிட்டுச் சொல்கிறேன். அப்போது சுலபமாகப் புரியும். பூனா முக்கோணம் என்று ஒரு இடம் இருப்பதாக வைத்துக் கொள்வோம். அங்கே இந்திய ரெயில்வே வண்டிகள் காணாமல் போய்விடுகின்றன. அப்போது நிச்சயமாக நான் சொல்வேன்: இது விபரீதமானது! ரயில் வண்டிகள் எப்படி மறைந்து போகும்? விமானங்கள், கப்பல்கள் நிச்சயம் மறைந்து போகுமென்று நமக்குத் தெரியும். அவை உடைந்து மூழ்கிப் போகின்றன; கடலுக்கடியில் அவை பத்திரமாக இருக்கின்றன - அது கற்பனையல்ல, விபரீதமல்ல. யாரும் பார்க்க முடியும். (காணாமல் போகும் ரயிலைப் போல அல்ல, அதை பிறகு யாரும் பார்க்க முடியாது.)

பெர்முடா முக்கோண பிரசித்தியம் பற்றி நான் கேட்க விரும்பும் கேள்வி ஒன்றுதான்: (பூமி மீது) பயணப் போக்குவரத்து அதிகம் நடக்கிற பெரிய கடல் மார்க்கத்தில் இங்கு மட்டும் தான் அதிகமாக விமானங்களும், கப்பல்களும் காணாமல் போகின்றனவா? இதற்குப் பதில்: இல்லை. இது பொய்.

பெர்முடா முக்கோணம் என்ற விபரீதம் கிடையாது. கட்டுக் கதை. ஏமாற்று வேலை. போதிய அளவு விமரிசன சிந்தனை இல்லாதவர்களை ஏமாற்றிப் பணம் பறிக்கும் வேலை.

**பறக்கும் தட்டு:** வேற்றுக் கிரக உயிர்கள் பற்றிய ஆராய்ச்சியில் என்னை விட அதிக ஆர்வம் உள்ளவர்கள் வேறு யாரும் இருக்க முடியாது; இதற்காக வெவ்வேறு கிரகங்களுக்கு விண்வெளிக் கப்பல் அனுப்பி வருகிறேன். ரேடியோ இணைத்த தொலை நோக்கிகளை வைத்துக் கொண்டு (80 லட்சம் ரேடியோ அலைகளை நான் தனித்தனியே ஆய்ந்து வருகிறேன்.) வேறு யாராவது நம்மோடு தொடர்பு கொள்ள முயலுகிறார்களா என்று தேடி வருகிறேன். வேற்றுக் கிரகவாசிகள் நம்மைச் சந்தித்தால் நான் மகிழ்ச்சி அடைவேன். அதிகமாக அளப்பவர்கள் அதிகமாக சாட்சியங்களை முன் வைக்க வேண்டும். இந்தச் சம்பவத்தைப் பொறுத்து, ஒரு சாட்சியும் இல்லை. இது போல் நிறைய கதைகள் சொல்லப்படுகின்றன. ஒருவன் தனக்கு ஏற்படாத அனுபவத்தை ஏற்பட்டதாக நினைத்துக் கொள்ளலாம். மனிதனின் நடத்தையில் மனவியல் (விலகல்கள்) மாற்றங்கள் நேருவதுண்டு. சிலர் ஒரு சில சமயம் புருகுலதைப் பார்க்கலாம். சிலர் குடித்துவிட்டு விநோதமான கற்பனை மாயங்களைப் பார்த்ததாகவும் சொல்வதுண்டு.

1947 லிருந்து கணக்கெடுத்தால் ஒரு பத்து லட்சம் பறக்கும் தட்டு சம்பவங்கள் வந்துவிட்டன. இதில் ஏதாவது ஒன்றிலாவது சம்பவத்தைப் பார்த்தவர் வேற்றுக் கிரகப்பொருள் எதையாவது சாட்சிக்காகக் கொண்டுவந்து காட்டினாரா? இல்லை. ஏதாவது குறியீட்டில் எழுதப்பட்ட ஒரே ஒரு புத்தகம், பூமிக்குத் தெரியாத ஒரு உலோகம், புவியீர்ப்பு விசையை மறுதலிக்கும் குணம் கொண்ட ஏதாவது ஒரு பொருள் - ஏதாவது கண்ணால் பார்ப்பதற்குக் கொண்டு வந்தார்களா? இல்லை; போலியாக இல்லாமல் ஒரு நல்ல புகைப்படம் கூட இல்லை. [illegible] இது போதும்.

பல சம்பவங்கள் நம்பகமாகவே பதிவு செய்திருக்கிறார்கள். உதாரணமாக, ஒரு நூறு பேர் வானத்தில் ஓர் ஒளியைப் பார்த்ததாகச் சொன்னார்கள். வானத்தில் ஒளி வருவதற்குப் பல காரணங்கள் உண்டு. ஒரு ரசிய, ஒரு அமெரிக்க பூஸ்டர் மீண்டும் பூமியருகே வரும் போது அற்புதமான, அட்டகாசமான ஒளியை உமிழ்ந்திருக்கக் கூடும். நான் மறுபடி சொல்கிறேன், அதிகமாக அளப்பவர்கள் தான் அதிகமான சாட்சியங்களை முன்வைக்க வேண்டும்.

உண்மையிலேயே ஒரு நல்ல சம்பவம் ஆதாரத்தோடு இருந்தால் நான் நிச்சயம் வரவேற்பேன். இப்படி அதி அற்புத அனுபவம் பெற்றவன் என்று பீற்றிக் கொள்ளும் ஒன்றிரண்டு பேரிடம் போய்ப் பேசுவதைக் கூட நேர விரயம் என்றே நினைக்கிறேன். அதில் பலர் மிகவும் நாணயமானவர்களாகவே இருக்கிறார்கள். ஆனால், அறிவியல் பூர்வமான சாட்சிக்கு ஒப்பாக அவற்றைக் கருத முடியவில்லை.

விண்வெளிக் கப்பலில் ஏறி ஒவ்வொருவர் போகும் போதும், நான் வழக்கமாகச் சொல்லி அனுப்புவேன், திரும்பிவரும் போது, "ஒரு வேற்றுக் கிரக மனிதனைக் கொண்டு வாருங்கள்" என்று. ●

● பஷீர்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேரோடு பிடுங்கி

(உருவகக்கதை)

பலம் கொண்ட முதிரைமரம்தான் முதலில் பேசியது. "இங்கு எமது காலடியில் இருக்கும் துவரை, விண்ணாங்கு, உலுவிந்தை, பன்னை, வெடுக்குநாறி போன்ற இச்சிறு இன மரங்களால் நாம் பல பகுதி நிலங்களை இழந்து கிடக்கிறோம். இனப்பெருக்கவிருத்தி அதிகம் செய்யும் இம்மரங்களால் எமது வித்துக்கள் தலை நீட்டமுடியாமல் மழுங்கிவிடுகின்றன. எனவே இப்பகுதியில் இருக்கும் இது போன்ற மரங்களை நாம் அழித்துவிட வேண்டியதுதான், எமது எதிர்கால வளர்ச்சிக்கு மிகவும் பொருத்தமானது என முதிரை மரம் தனது கருத்தைக் கூறி பேச்சை முடித்ததும் ஏனைய மரங்கள் கைதட்டி கரகோசம் செய்து வாழ்த்திக்கொண்டன.

விளாங்குள உயர்வர்க்க காட்டுமரங்களான முதிரை, யாவரனை, பாலை போன்ற மரங்கள் , கூட்டம் ஒன்றை கூட்டியிருந்தன. தமது பாரம்பரியத்தையும், உரிமைகளையும் காப்பதற்கான கூட்டம் என அதை அறிவித்திருந்தன.

இதைவிட நல்லதொரு பேச்சை எவரும் செய்யமுடியாது என அசந்து போயிருந்த ஏனைய மரங்கள் கூட்டத்தில் எவருமே பேசவில்லை. பலம் கொண்ட முதிரையின் பேச்சையே புகழ்ந்து குசுகுசுத்தன.

ஏகோபித்த ஆதரவு பலமான முதிரைக்குக் கிடைத்ததால் அடுத்ததாக எப்படி இச்சிறு மரங்களை அழிப்பது என்ற விவாதம் ஆரம்பமாகியது. முதிரையின் தலைமையிலேயே இக்கூட்டம் நடந்துகொண்டிருந்ததால் ஏனைய மரங்களிடம் முதலில் கருத்துக் கேட்கப்பட்டது.

பெரிய உண்மைகளை புரிந்து கொண்டவர்களாக கோபம் பொங்க இருந்த மற்றைய மரங்கள் ஒரேயடியாக இந்த மரங்களை வெட்டி சாய்த்து தீயிட்டுக் கொளுத்தவேண்டியதுதான் என தமது அழிப்புக்கருத்தை ஏகோபித்த முடிவாகக் கூறின.

முதிரை மரம் இளக்காரமாகச் சிரித்தது. தலையை ஆட்டி நெஞ்சைநிமிர்த்துவது போல் நின்றது. "இம்முடிவு ஆங்காங்கே எம்மால் செய்யப்பட்டதுதான். வெட்டிச் சாய்த்தென்ன நாம் வேரோடு பிடுங்கி இச்சில இன மரங்களை துரத்திவிடவில்லையா..? ஆனால் இன்றைய நிலையில் இப்படியான முடிவு முட்டாள்தனமென முதிரைமரம் கண்டித்தது. அதாவது இப்போது உலககாட்டு வளங்களின் பாதுகாப்புச்சபையின் கவனம் எம்மீதும் செலுத்தப்படுகிறது இல்லையா..? என தனது மறுப்புக் கருத்தை முதிரைமரம் கூறியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அப்படியெனில் உங்களது முடிவு என்ன ? ஏனைய மரங்கள் கேட்டன. ஒருமுறை தனது உடம்புக்குத்தியை அசைத்துக்கொண்டு மீண்டும் இளக்கா ரச் சிரிப்பை காட்டி முதிரைமரம் பேசத்தொடங்கியது.

"ஒரேயடியாக வெட்டி சாய்த்து, சுட்டு அழிப்பதென்பது நல்லதல்ல. பல்வேறு உபத்திரவம்

, சித்திரவதையைச் செய்யவேண்டும்..."

ஒரேயடியாகச் சொல்லாமல் சுற்றி வளைத்துக் கொண்டு முதிரைமரம் நின்றதால் ஏனைய மரங்கள் முடிவைச்சொல்லும்படிக் கேட்டன.

"இச்சில மரங்களின் உணவுக்குழாய்களைத் துண்டித்துவிடுவதென்பது, இம்மரங்களை உயிரோடு கொல்வதைப்போல் இல்லையா ...? இம்முடிவு பற்றி ஏனைய மரங்களிடமும் முதிரைமரம் சம்பிரதாயத்திற்காக கருத்துக் கேட்டது. ஏனைய மரங்கள் அருமையான முடிவு உடனடியாக செய்யவேண் டியதுதான் எனச் சொல்லிக் கொண்டன.

உணவுக்குழாய்கள் சீவப்பட்டன. சில இளமரங்கள் உயிரோடுவாழ்வது போல் தெரிந்தன. ஆனாலும் அவை அகதிபோல் உருக்குலைந்தன.

கடுமையான கோடைகாலம், நிலங்கள் கட்டாம்தரையாகிவிட்டன. நாளடைவில் இலைகள் கருகிச் சொரிந்தன, முழுமரமும் "கொள்ளி" போல் காய்ந்துபோனது. மொத்தத்தில் அவை பட்டுசெத்துவிட்டன.

பெரும் வர்க்க மரங்களுக்கு சந்தோசம் , தனித்துவத்தின் மகிழ்ச்சியோடு பூரித்தன. மாரியின் ஆரம்பம் மழை இடையிடையே பெய்தது. ஆங் காங்கே சின்ன மரங்களின் விதைகள் நிலத்தைக் கிழித்து...!

- நாகதிலகன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனவின் மீதி...

அம்மாவென
குழந்தை திடுக்கிட்டழுதது
கனவெனப்பட்டது.

நுளம்பின் ரீங்கரிப்பில்
குழந்தையின் சிணுக்கம்
காதைக்குடைந்தது
"மிச்சமென்ன சொல்லுங்கப்பா
மிச்சமென்னப்பா... "
இந்தக் குழந்தைகளிடம்
மாட்டிக்கொண்டாலே இப்படித்தான்
திக்குமுக்காடிப் போகிறது அறிவு.

பாருங்கள்
நான் மாட்டிக் கொண்ட நேரத்தை.

வெறிச்சென்ற தெருக்களினதும்,
தெருவோர கட்டடங்களினதும்,
ஆசுவாச நெட்டிமுறிப்பை
பெருமூச்சை
ஏன் விசும்பலை கூட,
செவிப்பறையால் உள்வாங்கியபடி
தாண்டித் தாண்டி ஓடிவந்து
படுக்கையில் விழுந்தால்
கொக்கி போடுகிறது குழந்தை.

இப்போ
எதை நான் சொல்வதாம்
அடி நுனி புரியாது.

குளிர் வாட்டி எடுக்கும்
பின்னிரவுப் பொழுது
ரெஸ்ரோரண்டில்
கையை காலை அடிச்சகளை
கண்ணுறங்கும் அசதி.

"அப்பா !
நாங்க எங்க பயணம் போறம்.
ஏனப்பா
வீச்சா மேலேழும்பிற்று பிளேன்!
தேடித் தேடிப் பார்த்தன்
உங்களை காணலியே
எங்கப்பா போன நீங்க !
நான் பயந்திட்டன்.
முழிச்சிப் பார்த்திட்டன்.
ஏனப்பா முழிப்பு வந்தது.
மிச்சமென்னப்பா !
சொல்லுங்கப்பா.
அப்பா...!"
நனைந்த ஆடைகளை
கழற்றி கடாசிவிட்டு
கேள்விக் கணை தொடுத்தபடி
எந்தன் போர்வையுள்
குழந்தை நுழைகையில்
நாசியில் ஏறுகிறது
மூத்திர வீச்சம்.

சுள்ளென குண்டியிலொன்று
அல்லது
தொனியை உயர்த்திய ஒரு சொல்

போதும்
நான் கொஞ்சம் கண்ணயர
குழந்தை அடங்க......
வேண்டாம்.

பெருவிரலை சூப்பி
சுதி சேர்க்க தலைமயிரை சுருட்டி
என் வாய்ச் சொற்களுக்காய்
அகலத் திறந்திருக்கும்
சிறு விழிகள்.
இரண்டிலும் சுடரும் தேடல் தீ !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான்தான் சொன்னேன்.
"வீடுவிட்டு வந்த பயணம்
மீண்டும் போக வேணும்தானே
பிளேன் பறக்கவேணுமென்றால்
உந்தி வீச்சா எழும்பும் தானே !
வானில் மூட்டம் படிந்திருந்தால்
பயணம் தடைப்படும்தானே,
கண்முழிப்பும் வருந்தானே
இன்னொருக்கா போகலாம்
இப்போ நீ கண்ணுறங்கு"

"நீங்க எங்க போனனீங்கப்பா
அதை இன்னும் சொல்லலையே...."

"அதுதானே, அதுதானே..."
நான் எங்க தொலைந்து போனேன்.
நானாய் தான் தொலைந்தேனே.
யாரும் என்னைத் தொலைத்தாரா ?
உருவற்று போனேனே.
நான் எங்கே ?
நான் எங்கே?
எங்கே நான்..?..?

"என்னங்க....
குழந்தைகளுக்கு நரிவிரட்டுகிற மாதிரி
சுழிக்கிறீங்க, சிரிக்கிறீங்க...
கனாக் கண்டீங்களா ?

நானா....?
கனவா...?
அப்படியானால் மீதி....?

- கி. பி. அரவிந்தன்.
கோடை - 1994. பிரான்ஸ்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வளர்ச்சி

முரசை கிழித்து
முரசு இருந்த
இடத்தில்
பற்கள் முளைத்தன
ஆ ஊ
என
சத்தம், அழுத
வாயில்
மழலையாக
பேச்சு வளம்
கையும், காலும்
அடித்து
விளையாட
என்றதை விடுத்து
கைகள்
தாவிப் பிடிக்கும்
கால்கள்
உரம் பெற
நடை
நிமிர்ந்தது.

ஆனால்
யுத்தம் புரிவோருக்கு
சுட்டெறிய
குந்தி வீச
காலில் பிடித்து
தரையில்
அடிக்கவும்
லேசான இலக்கு
கழுகிற்கு
கோழிக்குஞ்சு போல்
பல் முளைக்கும்
பேச்சு வளரும்
நடை நிமிரும்
எப்படி
எழுந்து நிற்பது.

- நாகதிலகன்.

## தாகம்.

சொந்த மண்ணில்
அகதிகளின் பரிணாமத்தில்
குண்டு மழையிலும்
குருதிக் குளங்களிலும்
சுவாத்தியம் தேடும்
எருமைகளின் கண்களைக்கட்டி
பறந்துவந்து
சுதந்திரச் சிறையில் வாழும்
நாடோடிகள்.

கடலலை பாய்ந்திடும்
புயல்மழை திரண்டோடும்
இயற்கையின் சீற்றங்கள்
இயல்பாயின்
சீராகப் பிரகாசிக்கும் உதவா
சித்தாந்தச் சிந்தனைகளை
சிறையிலிட வேண்டும்.
அறிந்துகொண்ட
அவல வாழ்வில்
தளிர்விட்ட அரும்புகள்
விஞ்ஞான விந்தையில்
நுண் கீலம்கீலமாக
அணுக்களைஆராய
அவலத்திற்கும் ஓர் வெற்றி!

மனித வளங்களை
நீண்ட விழிப்புடன்
புதிய விதைகளை
ஈரப்பதனில் தளிர்விட
இனிய வாழ்த்துக்கள்.

—மு.குணநாயகம்—



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்றி : புதிய கலாச்சாரம்

# கேள்வி நேரம்

பரதேசிகளை உருவாக்கும்
உபதேசிகளே
விலைவாசி பற்றி உங்கள்
வேதாந்தம் என்ன?

ஜெகத் குருக்களே,
சீக்கிரம் சொல்லுங்கள்
'எல்லோர்க்கும் படி அளக்கும்
ஈசன்'
இப்போது எந்தக் கடையில்?

பாலைவனங்கள் பல கடந்து
நபிகள் நாயகம் நடந்த கதையை
உருகி உருகிப் படித்தது போதும்

பல்கலைக் கழகம் பல கடந்து
வீதிக்கு வீதி வேலைதேடி
அலையும் இளைஞரின்
அவலம் துடைக்க
குத்துமதிப்பாகவாவது
திட்டமுண்டா
'குர்ரானில்'

சம்பளச் சிலுவையில்
சரீரம் வதங்கி
குடும்பச் செலவில்
மயங்கி விழுந்தோரை
'ஞானஸ்நானம்' கரையேற்றிடுமா?

மாசக் கடைசியில்
மரித்துப்போவதும்
ஒண்ணாந் தேதி
உயிர்த்தெழுவதும்...
ஏசுவைப் போல...
இங்கு எத்தனை பேர்கள்...?

கடன் சுமையில் விழிபிதுங்க,
கேலி செய்யும் 'வாழ்க வளமுடன்'

''ஆழ்நிலை தியானம்...
குண்டலினிசக்தி''
அடுப்பெரிக்க ஆகுமா?

உழைக்காதிருக்க
பழகிய மகான்களே
பசிக்காதிருக்க ஏதும்
பயிற்சி உண்டா?

தாய்ப்பாலிலும் சிக்கனம் பிடித்து
இரத்தம் விற்கும் வறுமையிலே
உறுப்புகளைத் தவிர அடகுவைக்க,
ஒன்றுமில்லையே... பாவிகளே...!

வழிப்பறிக் காரர்கள்
காட்டிய வழியில்
பயணம் போய்
பட்டது போதும்...

பதுக்கல்காரனைப் பாதுகாக்கும்
அரசுக்கெதிராய் அணி வகுத்தாலே
வாழ்க்கை இனி அகப்படும்.

துரை. சண்முகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனி ஒரு தாலாட்டு

இருள் கவிந்த இரவுப் பறவையொன்று
முடியுடை மன்னர்கள் மதுவருந்தி
சல்லாபித்துக் கொண்டிருந்த...
முன்னொரு முழு நிலவுப் பொழுதில்
கோரத்தனமாக பற்களைக் காட்டி,
இறக்கைகளை விரித்து மூடியது.

இன்று நான் பிறந்த போதிலும்...
இருளையே பார்த்தேன்!
மற்றவான் எல்லாம் எப்போதும் போல்
வெளிச்சமாயித் தோன்றிற்று.
ஏன், என் கையகலப் பூமி மேல்
கறை காவு கொண்டது?

"நளாயினியின்" நாயன்மார் காலத்துக் கதை
அன்னை உரைத்தாள்.
"இங்கு என்ன நடந்தது"?
என்னைப் போல் இருளுக்குள் பிறந்தவர்
எல்லாம் கேட்கத் தொடங்கியாயிற்று.

தாயின் வாயில் துப்பாக்கிப் பூட்டு
வாசல்படி தாண்டினால்...
மிதி வெடி வெடிக்கும்.
உ(பெ)ண்மை சொல்லாதே என்று.
எருமை வரும் என்ற பயம்
என் பிறப்புடன் போயிற்று!
தாயே நீ பாடு
இருள் கவிந்த காரணமும் சேர்த்து
"இனியொரு தலாட்டு"!
நான் தூங்கு வதற்கல்ல.
நாங்கள் எல்லாம் கோழைகளாக எப்படி?
இவ்வளவு காலமும்
தூங்கிக் கொண்டிருந்தோம் என்று.

- செல்வமதீந்திரன்
நன்றி : சரிநிகர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனதூர்.
# சிறப்புத்திருவிழா

ஆனியில் கொடி பறந்து ஆடிவரையும் திருவிழாக்காலம். மொத்தம் பதினெட்டுத் திருவிழா. முதல் பத்தும் கோயில் திருவிழா, கடைசியும் கோயில் நிர்வாகத்திற்கே . இடையில் சிலது சிறப்புத் திருவிழா ஊரில் பணக்காரார்களுக்கு. வயல் ஈரத்தை கச்சான் காற்று அள்ளிவீசும் இரவுகளில் கோடைகால கோயில் வெளி குளிர்மையுறும். இச்சிறப்புத் திருவிழா நாட்கள் தான் மக்களின் விருப்பத்திற்குரிய தெய்வங்கள் வெளிவீதிக்கு எழுந்தருளி காட்சியளிக்கும்.

அன்றைய தினம் காவடி, கற்பூரச்சட்டி எரிப்பு, பாற்செம்பு, அங்க பிரார்த்தனை என மக்கள் தம்மை வருத்தி மன ஆறுதல் அடைவர்.

மணிக்கடைகள், உணவுக்கடைகள் என கடைகள் குவிந்திருக்கும். இசைக்குழுவினர், நாதஸ்வர மேளக்குழுவினர் என வெளியூர்களிலிருந்து குறிப்பாக யாழ்ப்பாணத்திலிருந்து எடுப்பிப்பார்கள். இக்குழுவினர் எவ்வளவு பணம் பெறுகிகிறார்கள் என்று சனங்கள் மத்தியில் திருவிழாக்காரார்களால் தகவல் வெளியில் விடப்பட்டிருக்கும். இதனால் சனம் திரண்டு கிடக்கும். சிறப்புத் திருவிழா செய்தோம் என பெயர் எடுத்து பெருமை கொள்வார்கள் திருவிழாக்காரர்கள்.
சிறப்புத் திருவிழாக்காரர்கள் வேட்டியும், வெறுமேனியுமாக தெய்வபக்தி கொண்டவர்களாக காணப்படுவார்கள். இச்சிறப்புத் திருவிழாக்காரர்களில் ஒருவர் கடும் வட்டிக்காரர், இன்னுமொருவர் சுத்த நண்பனுக்கு குழிபறித்து பதர் ஆக்கியவர். இன்னுமொருவர் தரமில்லா பொருட்களையும், அதையும் கடும் விலைக்கு விற்று லாபம் சேர்ப்பவர். இவர்கள் எல்லாம் கூலிக்கார ரையும் வதைத்தவர்கள்.

இவர்களின் பூசை நாளில் தெய்வங்களுக்கு கண்குளிரும். வெளிவீதிவ ரையும் வலம் வந்து பூசையை ஏற்றுக்கொள்ளும். பரம்பரைகளாகத் தொடரும் இவர்களின் திருவிழாக்கள்.

அப்படியெனில் ஆராய்ச்சி மனோபாவத்தில் இக்கோயில்கள் பற்றிய வியாப்பிற்கு என்ன விடை கிடைக்கும்?

**தம்பலகாமம்,**
**தம்பன்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓட்டைகள்...

ஓட்டைகள்...

## ஐயரின் தகுதி!

"இவரெல்லாம் இங்குவந்துதானுங்க சமஸ்கிரதம் படித்தவர்...". அருகில் இருந்தவர் அக்கம் பக்கம் திரும்பிப்பார்த்தார். ரகசியம் சொல்வதைப் போல் கலியாணமண்டபத்தில் ஐயரின் சமஸ்கிருதம் ஆரவாரமாகக் கேட்டது ஏதும் புரியாமல். என் அருகில் இருந்த அந்த நபர் மேலும் சொன்னார், "இந்த ஐயர் எல்லாம் ஊரில கீரிமலையில சவச்சடங்கு செய்யிற ஆட்கள். இங்கவந்து ஐயர் ஆகிட்டாங்க..." இப்படி தனது வருத்தத்தை வெளிப்படுத்தினார்.

ஏமாற்று, மோசடி போன்ற பொய், பித்தலாட்ட சடங்குகள் கூட உயர்தர பிராமணன்தான் செய்திட வேண்டுமென்ற வக்கிர எண்ணம், யாரிடம் சொல்லிக் கொள்வது இவர்களை.

**கேட்டது.**

**- நாகதிலகன்.**

## அன்பளிப்பு

கடைசித்திகதி நெருங்கிக் கொண்டிருந்தது. புதுநாட்டிற்குள் போவதற்கு பணச்சிக்கல்களால் அலைந்துகொண்டிருந்தார் அவர். ஏற்பாடு சரியாக திடீரென்று புறப்பட்டுவிட்டார். அதையறிந்த அவரது நண்பர்கள் கலியாணத்திற்குக் கொடுத்த காசை நினைத்து வருத்தப்பட்டனர். "ஆகக்குறைந்தது ஒரு பாட்டியாவது வைச்சிட்டுப் போயிருக்கலாமே.." இப்படிச் செய்திட்டாரே என பேசிக்கொண்டதை இன்னுமொருவர் கேட்டுவிட்டு என்னுடன் அன்பளிப்பு பற்றிப் பேசினார்.

**தகவல்.**

**- ஜெயம்.**

## தேயிலைப் பெட்டியும், டொலரும்

எம்மவர்களை ஐரோப்பிய, கனடா போன்ற நாடுகளுக்கு கடத்தி வைக்க பிரயாண முகவர்கள் ரஷ்யாவை பயன்படுத்துவது என்பது பழைய கதை. அங்கு எம்மவர்கள் தங்கியிருக்கும் வீடுகளுக்கு குடியகல்வு, வரவு போன்றவற்றைக் கண்காணிக்கவரும் பொலிஸ்காரர்களுக்கு ஓரிரு தேயிலைப்பெட்டியும், ஓரிரு டொலரும் கொடுத்தால் போதுமாம். எந்த விபரங்களையும் பரிசோதிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கமாட்டார்களாம். இதற்காக பிரயாண முகவர்கள் தேயிலைப்பெட்டிகளை இலங்கையில் இருந்து கட்டி சுமப்பார்களாம். இது ஜெல்சினின் பொலீசின் சீந்துவம் மட்டுமல்ல, விமான நிலைய அதிகாரிகளிடமும் லஞ்சமோகம். எம்மவர்கள் டொலர் கொடுக்கிறார்கள். இனி என்னதான் நடக்காது ரஷ்யாவில்.

**தகவல்,**
**கிரிஜா.**

## ஒரு புத்தாண்டுக்குறிப்பு

*(1. 1. 95)*

(பதிவேட்டிலிருந்து நாகதிலகன்).

நாமெல்லாம் தம்மை சாமிகள், கடவுளின் சீடர்கள் என்று சொல்லுப வர்களின் நம்பிக்கை பற்றிய எல்லைக்கே வந்துள்ளோம். இனிமேலும் பாதங்களில் விழுவதோ, போற்றுவதோகாட்டுமிராண்டிக்கால அறியாமை நிலையாகும்.

நாம் செய்யவேண்டியதெல்லாம் அந்த மோசடி குற்றவாளிகளையும், அவர்களது ஆச்சிரமங்களையும் தீயிட்டுக் கொளுத்துவதே.

பின்குறிப்பு.

எனக்கு 13. 1. 95. இல் கிடைத்த புதிய ஜனநாயகம், சாயிபாபாவிற்கு பிறகு அம்பலப்பட்ட பிரேமானந்தாவைத் துக்கிலிடு, ஆச்சிரமத்தைக் கொளுத்துவோம் என மக்கள் நெருப்பேந்தி எழுச்சி கொண்டது. பற்றிய செய்தியைத் தந்திருந்தது. மகிழ்ச்சியான விடயம்.


ஆனால் தமிழக காவல்துறை எழுச்சி கொண்ட மக்களை தடியடி செய்து விரட்டியது. வேடிக்கையாக உள்ளது. அநீதிகளுக்கெதிரான மக்கள் எழுச்சி ஆட்சியாளர்களையும் அச்சுறுத்துகிறதோ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித இன குரங்குவகை

SCHIMPANSE



கொரில்லா

Abb. 132 Gorilla

சிம்பன்ஸியின் வாழ்நிலை சுற்றுச் சூழலானது மத்திய ஆபிரிக்காவின் மழைஅதிகம் கொண்ட உஷ்ணபிரதேச காட்டுப்பகுதியும் மலைக்காட்டுப் பகுதியும் ஆகும். சிம்பன்ஸியானது நிலத்தில் நடமாடும்போது அரிதாகவே கால்கள் இரண்டாலும் நடக்கின்றன. ஆனால் அநேகமாக இவை நடக்கும்போது கை, கால் என நான்கையும் பயன்படுத்துகின்றன. இவைகளின் கால்களை விடவும் கைகள் நீளமானவை. தோல் கருமையானது. காதுச்சோனைகள் பெரிதாக உள்ளன.

சிம்பன்ஸி குழுக்களாகவே வாழ்கின்றன. சுதந்திரமாக நடமாடுகின்றன. புலிகளிடமிருந்து தப்புவதற்கு ஒருமித்து எதிர்நடவடிக்கை செய்கின்றன. அதற்காக கம்புகளை தாக்கும் கருவிகளாக உபயோகப்படுத்துகின்றன.

அத்தோடு இவைகள் உழைப்புக்கருவிகளையும் பயன்படுத்துகின்றன.


உதாரணமாக இச்செயலைப் பார்ப்போம்.

எட்டிப் பிடுங்கமுடியாத உணவுவகைகளைப் பெற்றுக்கொள்வதற்காக தடிகளைப்பயன்படுத்துதல் இன்னும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிம்பன்ஸி





ஒராங் உதான்


தோல்தடிப்பான விதைகளை உடைத்து உண்பதற்காக கற்களைப் பயன்படுத்துதல் போன்றனவற்றைக் குறிப்பிடலாம்.

சிம்பன்ஸியானது உறங்குவதற்காக மரங்களில் "சிராம்பி" அமைக்கிறது. இதைக்கட்டுவதற்காக நடுத்தரமான மரக்கிளைகளின் உச்சியைத்தெரிவு செய்கிறது.

சிம்பன்ஸியானது அநேகமாக குட்டியைப்பிரசவித்தால் அக்குட்டியானது பலமாதங்கள் தாயோடுதான் வாழ்கிறது.

இவைகளின் முகத்தோற்றத்தினூடாக இவற்றின் மனநிலையினை அறிந்து கொள்ளலாம். இவை சிரிப்பு, பயங்கரம், பயம் பிரமிப்பு போன்ற உணர்வுகளை வெளிப்படுத்துகின்றன. இவை அழுகின்றன. ஆனல் கண்ணீர் சிந்துவதில்லை. தண்ணீர் பருகும்போது கைகளால் அள்ளிப்பருகிகின்றன. அல்லது மர இலைகளிலிருந்து குவளைபோல் செய்து அதனல் அள்ளிப்பருகுகின்றன.
சிம்பன்ஸிபோலவே இன்னும் மனிதஇன குரங்குவகைகளாக கிப்போன்ஸ் (Gibons) ஒராங் உதான் (Orange utan), கொரில்லா(Gorilla) என்பனவும் அடங்குகின்றன.
இவை அடிப்படையில் வளர்ச்சி பெற்ற மூளைகொண்டவையாக இருப்பதால் இவைகளின் செயல்கள் புத்திக்கூர்மைஉள்ளவையாகக் காணப்படுகின்றன.

மூலம் : டொச் மொழி
தமிழில் : திலக்
விளக்க உதவி : அண்ணா பார்பரா(Anna Barbara)




வெள்ளை கிப்போன்ஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொலம்பஸின் பயணத்தில்



## 16ம் நூற்றாண்டு ஓவியங்கள்.

கிறிஸ்தோபர் கொலம்பஸோடு கூடவே சிலுவை சுமந்த பாதிரிகளும் சென்றனர். இந்தியாவிற்கு கடல்வழியே தேடிப்புறப்பட்ட கொலம்பஸ் (1492) சென்றடைந்ததெல்லாம் மத்தியஅமெரிக்க தீவுகளைத்தான். அந்த பழங்குடியினரைப் பார்த்தவுடன் அவர்களை இந்தியர்கள் என்றே கொலம்பஸ் நினைத்தான்.

அப்பழங்குடி மக்கள் பொன்னும், நகையும் கொடத்து வரவேற்றார்கள். வருத்தம் கண்டவர்களுக்கு வைத்தியம் பார்த்தார்கள். உண்பதற்கு உணவுகளும், பழங்களும் கொடுத்தார்கள், மனிதப்பண்புகளின் எடுத்துக்காட்டாக.

வரலாற்றில் மன்னர்கள் மோதியது, படையெடுத்தது மக்கள் நலன் சார்ந்த விடயங்களா..? அதுபோலத்தான் ஸ்பானிய மன்னனும், ராணி இசபெல்லாவும் கொலம்பஸ் என்னும் பங்குதார தளபதியை வைத்து கடல் கடந்தும் நாடுகளைச் சுரண்ட நினைத்தார்கள்.

மத்திய அமெரிக்க தீவுகளைச் சென்றடைந்த கொலம்பஸ் கும்பல் அந்த பழங்குடியினரிடமிருந்து தங்கங்களை மோசடியாகச் சுருட்டிக் கொள்வதைத்தான் பிரதான இலக்காகக் கொண்டு செயற்பட்டது. (5.-6.95 இல் DRS என்னும் சுவிஸ் தொலைக்காட்சி அலைவரிசையில் " Erobe rung paradieses " என்ற கொலம்பஸின் பயணத்தைச் சொல்லும் அமெரிக்கப்படம் (1992) ஒளிபரப்பப்பட்டது. "வெற்றி கொண்ட சொர்க்கம்" என தமிழில் அர்த்தம் பெறும் இப்படம் உண்மைகளைச் சரியாகச் சொல்லவில்லை எனத் தெரிகிறது. ஆனாலும் தங்கம் எடுக்கவேண்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதை குறியாகக் கொண்டதை பார்ப்பவன் அவதானிக்கமுடியும்.

இதன் விளைவு மண்ணின் மைந்தர்களான செவ்விந்தியர்களை துப்பாக்கி, வாள், தூக்குமரம் எல்லாம் சூழ்ந்துகொண்டது. கோடிக்கணக்கில் மக்கள் கொல்லப்பட்டனர். அந்த மண்ணே சிவந்துபோகுமளவிற்கு.

பெண்கள் பாலியல் வன்முறைக்கு ஆளானார்கள். சிறைபிடிக்கப்பட்டவர்கள், அடிமையாக விற்கப்பட்டனர். அடிமை வியாபாரம் ஒன்று வீறுகொண்டு ஆரம்பிக்கப்பட்டது. இப்போது கொலம்பஸ் புதிய உலகம் கண்டுபிடித்ததாகப் புலம்பினான்.

கொம்பஸ் அந்த மண்ணைத் தொட்டு முத்தமிட்டதோடு அந்த பழங்குடியினரின் இயற்கையோடு ஒட்டிய பொருளாதார வாழ்வும், அவர்களது இருப்பும் சின்னாபின்னப் பட்டு சீரழிந்தது.


இவ்வேளையிலும் அந்த மக்களிடம் இந்த அநியாயங்களை நிறுத்தி சொர்க்க ஆட்சியை அமைக்க தேவனின் வருகை அண்மித்துவிட்டதாக பாதிரிகள் நிச்சயம் மதப்பிரசாரம் செய்திருப்பார்கள்.

காலனிவாதிகளை எதிர்த்த பழங்குடியினரின் போர்க்குணத்தை இவ்வாறு பாதிரிகள் சமரசம் செய்திருப்பார்கள். அதனாலோ என்னவோ கொலம்பஸ் பட்டாளம் தேவனின் அருளால் வெற்றியும் கண்டார்கள். இன்னும் எந்தக் கடவுளும் வராத தால் ஐரோப்பாவிற்கு தங்கம் மட்டுமல்ல, உருளைக்கிழங்கு, தோடம்பழம், பருத்தி, வாசனை (கறுவா, கடுகு போன்றவை) பொருட்கள் அறிமுகப்படுத்தியதும் அள்ளிவழங்கியதுமான அந்த மண் மக்கள் இப்போதும் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் கிடுக்கிப் பிடிக்குள்.

தொகுப்பு.
- நாகதிலகன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





தீவிர மதம் பரப்பும்.
வெறிகொண்ட
கொலம்பஸ் பட்டாளம்.
ஈட்டியால் குத்தி பழங்குடியினரை
சிறைப்பிடிக்க அல்லது
கொன்றுவிடத்துடிக்கும்
கொலம்பஸின் படையணி.
பெண்ணொருவரை பாலியல்
துன்புறுத்தல் செய்ய முனையும்
கொலம்பஸின் படையணியைச்
சேர்ந்தவன்.
இவைகள் இவ் ஓவியங்களால்.
வெளிப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "கரைந்து மறந்து விடுவேன்"

ஆங்கிலேய ஏகாதிபத்திய வல்லரசு 1931 ஆம் ஆண்டு பங்குனி
மாதம் 23 ஆம் திகதி இந்திய புரட்சி வீரர்களான பகத்சிங், சுக்தேவ்,
ராஜகுரு ஆகியோரைத் தூக்கிலிட்டுக் கொன்றது.

பகத்சிங் தனது சகோதரனுக்கு எழுதிய கடைசிக் கடிதத்தின்
கடைசி வரிகளை இப்படித்தான் முடித்தான்.

"நாளைக் காலையில் மெழுகுவர்த்தியின் ஒளி மங்குவ
தைப் போல நானும் காலை ஒளியில் கரைந்து மறைந்து
விடுவேன். ஆனால் நம்முடைய நம்பிக்கைகள், குறிக்கோள்
கள் உலகத்தை பிரகாசிக்கச் செய்யும். இன்று போய் நாளை
நாங்கள் மீண்டும் பிறப்போம் எண்ணற்ற இந்நாட்டு வீரர்கள்
உருவத்தில்"

நன்றி: புதியஜனநாயகம்

# வெளிச்சம் கண்டு அஞ்சிய பேய்கள்

எடுத்திட்டு
"ஆராவது போய் மண்டபத்தில் இருக்கிற விளக்க
வாங்க.." எங்களில் யாரும் போகவில்லை. அப்போதுதான், "பேய்" பற்றிய
கதைகளைப் பரிமாறிக்கொண்டிருந்தோம். முந்தநாள் பத்தர் என்னும்
வயோதிபர் இறந்துபோனதால் வீட்டுக்கு வரும் சில பெரிய மனிதர்கள் "பேய்"
பத்தரின் "பேய்" பற்றி கதைத்தும் இருந்தார்கள். "பேய்" மண் அள்ளி
எறிந்ததாகவும், கூச்சல் போட்டதாகவும், எமக்குப் பயமாக இருந்தது.

நாம் பத்தடிபோய் விளக்கை எடுத்து வராததால் அம்மா தானே சென்று
எடுத்துவந்திருந்தா. அப்பிச்சியிடம் நாம் பேய் பற்றிக் கேட்போம், அது எங்கு
இருக்கிறதென்று. "முந்தி ஒரு காலத்தில் பேய் இருந்ததுதான். இப்ப 'டோச்
லைற்' பாவனைக்கு வந்ததால் பேய் பெரிதாக இல்லை" என்பார்.

கும்மிருட்டில் மின்னொளி இல்லாவிட்டால் ஆளையாள் இனம் காணமு
டியாது. எதிரில் நிற்பது 'பேயா', 'பேய்' வேடம் போட்ட மனிசனா எப்படித்
தெரியும்.

சற்று புத்திசாலித்தனமாக மக்களை ஏமாற்றியவர்கள் தமது சொத்தைப்
பாதுகாக்க, சிறு களவு செய்ய, மந்திர பூசாரி ஐயர்களாக கோயிலை
அண்டிப் பிழைத்தவர்கள், பேய் வேடம் போட்டிருக்கிறார்கள். வெளிச்சம்
கண்டு அஞ்சியது வேடம்.

சிறுபராய நினைவுகளை ஆராய்ச்சி மனோபாவத்தில் மீட்டும்,

- நாகதிலகன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொரியரிசி சோயா உழுந்து மரக்கலவை : (ஜீவாகாரம்)

## பொரியரிசி, சோயா, உழுந்து மாக்கலவை செய்யும் முறை ஒரு கிலோகிராம் மாவு தயாரிப்பதற்கு

அ. பொரியரிசிமா (65%) 650 கிராம் இரண்டரைச்சுண்டு வெட்டியது. குத்தரிசியை கழுவிக்காயவைத்து சட்டியில்போட்டு அடுப்பில் வைத்தால் அது வெடித்துப்பொரியாகும்.

ஆ. சோயா மா (25%) 330 கிராம் (முக்காற்சுண்டு) (ஒரு சுண்டு = 400 கிராம் வெட்டியது) சோயா பருப்பை நீரில் ஊறவைத்து மறுநாள் காலை தோல் நீக்கி கழுவி வெய்யிலில் நன்கு காயவைத்தல்; பின் சட்டியில் இட்டு நன்றாக வறுத்தெடுத்தல்; 330 கிராம் சோயாவை எடுத்தால் கழிவுகளின் பின் 250 கிராம் சோயாப்பருப்பு க் கிடைக்கும்.

இ. உழுத்தம்மா (10%) 115 கிராம். (காற் சுண்டு) முழு உழுந்தை நன்கு வறுத்து இரண்டாக உடைத்து கோதை நீக்கவும். இதிலும் கழிவுகளின் பின் 100 கிராம் உழுத்தம்பருப்புக்கிடைக்கும்.

இவை மூன்றும் ஒன்றாகக்கலக்கப்பட்டு, துப்பரவாக நன்கு அரைக்கப்படவேண்டும். திரிகைக்கல்லிலும் திரித்துக்கொள்ளலாம்.

1-2 கரண்டி அரிசி, சோயா, உழுந்து மாக்கலவையைச் சீனியுடன் கலந்து சுடுநீர் அல்லது பாலுடன் சேர்த்துக் களிபோலச்செய்து கரண்டியினால் குழந்தைகளுக்குக் கொடுக்கலாம்.
வளர்ந்த பிள்ளைகளுக்கும் பெரியவர்களுக்கும் தேவையான அளவு மாவுக்கலவையுடன் தேங்காய்த்துருவல், சீனி, சுடுநீர் அல்லது பால் அல்லது வாழைப்பழம் சேர்த்துப்பிசைந்து உருண்டைகளாகச் செய்து உண்ணலாம்.

சீனி, தேங்காய்ப்பால், வாழைப்பழம் சேர்ப்பதால் உப உணவின் தரமும் சக்தியும் கூட்டப்படுகிறது. இம்மாக்கலவையை தத்தம் வீடுகளில் மிகவும் சுலபமாத் தயாரித்துக்கொள்ளலாம். இவை குழந்தைகள் உட்பட பிள்ளைகள் பெரியோர்கள் விரும்பியுண்ணும் உபஉணவுகளாகும். ஆனால் கட்டாயமாக மந்தபோசனையுடைய பிள்ளைகள், கர்ப்பிணித்தாய்மார்கள், பாலூட்டுந்தாய்மார்கள் உண்ணவேண்டிய உணவாகும். அத்துடன் சகல வயதினரும் தமக்கு மாற்றுணவாகவும் பயன்படுத்தலாம்.

நன்றி : சிறுவர் பாதுகாப்புநிதியம் - யாழ்ப்பாணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவசாயியின் அனுபவத்தில் விளைந்தன..!

இலங்கையின் கிழக்கு தமிழ், முஸ்லிம் உழவனின் அனுபவத்தில் விளைந்த சில மரங்களின் பாவனைகளும், அவைகளின் பேச்சு வழக்குச் சொற்களும் அச்சமூகத்தின் தேசியதனித்துவத்திற்கு ஒரு மிகையான சான்று.

துவரை- மாடு சாய்ப்பதற்கும், மாடுகளினால் சூடு, வயல் அடித்தல், உழுதல், வண்டில் விடுவது போன்ற தேவைகளுக்கும் பாவிப்பார்கள். இதை வெட்டி நெருப்பில் வாட்டி 3-4 அடிநீள துண்டுகளாக்கி எடுத்தால் மாடுகளை அடித்தாலும் இலகுவில் உடைந்துபோகாது.

பன்னை மரம்- இதன் குழைகளை "கோலத்து" குழை என்பார்கள். பன்னைக் குழைகளை முறித்தெடுத்து இறுக்கமாகக் கட்டி கூட்டுவதற்கு அளவான கம்பைச் செருகி நெற்களம் கூட்டுவதற்கு பயன்படுத்துவார்கள். இதை வடிவமைத்தவுடன் "கோலத்துக்கம்பு" என்பார்கள்.

வெடுக்குநாறி- இதிலிருந்து "வேலையாள் கம்பு" வடிவமைப்பார்கள். இவ்வெடுக்குநாறி கம்புகளை வெட்டும்போது நுனிப்பகுதியில் அரிவாள் போன்ற (நெற்கதிர் வெட்டுவதற்கு பாவிக்கும் கத்திபோல்) பகுதியையும் வைத்து வெட்டி எடுத்து நெருப்பில் வாட்டி கேள்விக்குறிபோல் வளைத்தெடுத்து நெற்களத்தில் வைக்கோலை உதறி நெல்லைப் பிரிப்பதற்குப் பயன்படுத்துவார்கள்.

விற்பனை- முக்கியமாக வண்டிலுக்கு அச்சாகப் பாவிப்பார்கள். ஈழத்திற்கான சண்டையைத் தொடர்ந்து காடுகளுக்குப் போய் "அச்சுகுத்தி " வெட்டி வர முடியாத நிலை ஏற்பட்டதால் புளியமரக்கட்டைகளில் இருந்தும் அச்சுச் செய்தார்கள். ஆனாலும் இவை விற்பனை மரம் போல் நீண்ட காலம் உழைக்க உகந்ததல்ல.

பால்கொடி- வயல்பகுதியில் அமைக்கும் "மால்", "சிராம்பி" போன்றவைகளைக் கட்டுவதற்கும் இன்னும் வேலி கட்டுவதற்கும் அதாவது சிறு இளக்கயிறு போல பாவிப்பார்கள்.

உலுவிந்தை- விண்ணாங்கு, காயான், பண்டிக்காயான் இம்மரங்களில் இருந்து "வரிச்சு", "பூட்டு", "வளை", "கதியால்" போன்றவைகளை பெறமுடியும்.

காயான்- கம்பில் இருந்துதான் காடு வெட்டுவதற்கு பாவிக்கும் "வெட்டுக்கத்தி", இதற்கு பிடி போடுவார்கள்.

பாலை- கலப்பைக்கான "படவாள்" பகுதியை வடிவமைப்பார்கள். இம்மரத்தின் வளைவான கந்துகளில் இருந்தே இது உருவாகிறது. இம்மரத்தில் இருந்தும் சுவையான மஞ்சள்நிற பழம் கிடைக்கிறது.

வீரை- இம்மரத்தின் பகுதிகள் "கொள்ளி" க்காகப் பயன்படுகிறது. நன்கு எரியக்கூடிய, நீண்டநேரம் "தணல்" அணையாமல் இருக்கும் தன்மைகொண்டது இம்மரக் கொள்ளிகள். இதிலிருந்து குண்டுமணியைப்போல் சற்றுப் பெரிதான சிவப்புநிற சுவையான பழங்கள் கிடைக்கின்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவராத்திரி பூசை

## சாமியாடிகளும் சாதிய உணர்வும்

(காலம் எத்தனை வருடங்களுக்கு மேலாக கடந்து சென்றாலும் மனப்ப திவுகள் அழிந்துவிடுவதில்லை. அவைகளில் இருந்து கேள்விகள் எழும்பிக் கொண்டே இருக்கும். அங்கு ஆராய்ச்சி மனோபாவமும் அமைந்துவிட்டால் உண்மைகளும் பூத்துவிடும். இங்கு பத்து வருடங்களுக்கு மேலான ஒரு அவதானிப்புதான் எழுத்தாக எழுந்துகொண்டது).

அந்த வயோதிப சாமியாடி முதல்மண்டபத்தை தாண்டி ஒரு அடிகூட உள்நோக்கி எடுத்துவைக்கவில்லை, நவராத்திரி பூசை முடியும்வரை.

இப்போதும் கூரையால் மேயப்பட்ட முதல்மண்டபம். அதற்கு சீமெந்தும் இல்லாமல் அதைத் தொடர்ந்து பலிபீட மண்டபம், அதைத் தொடர்ந்து மூலஸ்தானம் அங்கு அம்மன் சிலை, இப்போதும் நினைவுகளில்....!
அம்மன், பேச்சிஅம்மன், வைரவர், காளி, அனுமான். இது போன்ற பெயர்களில் ஆறு, ஏழு பேர் சாமியாடிக் கொண்டிருந்தனர். அந்த பிரபலமான அம்மன் கோயிலில் நவராத்திரிக் காலங்களில் சாமியாட்டம் ஒரு முக்கிய நிகழ்வு.

அம்மனும், பேச்சி அம்மனும் சகோதரச் சாமிகளாம். உடுக்கடி, கும்மி பாடல்களுக்கு ஏற்ப கைகோர்த்து மெதுவாக துள்ளி ஆடிக்கொண்டிருந்தார்கள். ஒருவர் தனக்குள் புகுந்திருந்த அம்மன் வெளியேற தனது உடலில் அனுமான் புகுந்துவிட்டதாக குரங்குபோல் பாவனை செய்து கொண்டிருந்தார். இன்னுமொருவர் தனது உடலில் வைரவர் புகுந்திருப்பதாக தீவிரமாக " ஆ, கூ" எனச் சத்தம் போட்டு ஆடிக்கொண்டிருந்தார். இன்னுமொருவர் அம்மன் தனது உடலில் புகுந்திருப்தாக நந்தி சிலை மீது ஏறி அட்டகாசமாக ஆடிக்கொண்டிருந்தார். அவர் அம்மன் சிலையின் கண், வாயில் குங்குமம் பூசியிருப்பதைப்போல் தானும் குங்குமத்தை எடுத்து வாய், முகமெல்லாம் பூசியிருந்தது பயத்தோற்றத்தைக் கொடுத்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த வயோதிப சாமியாடி மட்டும் முதல் மண்டப படியைத் தாண்டி ஒரு அடிகூட உள்நோக்கி முன்னேறவில்லை. எப்போதும் வேண்டாத விருந்தாளிபோல் அவ்விடத்தோடு தரித்துக்கொள்வார். "அந்த மனிசனுக்கும் அம்மன் சாமிதான் பிடித்தாடுவது. . " என்று ஊர் எல்லாம் சொல்வார்கள். இந்தக் கோயிலில் ஆடும் எல்லாச் சாமியாடிகளும் வெளிப்பகுதியில் நின்றபோதுதான் சாமிபுகுந்தாடத் தொடங்கினார்கள். கோயில் தொங்கல் படையல் வரை ஓடிச் சென்றாடினார்கள் அம்மன் கோயில் சொந்தக்காரர்கள் போல் உரிமையோடு.
தாழ்த்தப்பட்டவர்கள் எனக் கருதப்படும் பக்கத்துக் கிராமத்தில் தன்னந் தனியனாக நவராத்திரிப் பூசையில் கலந்துகொள்ளும் இந்தவயோதிப சாமியாடிக்கு புக்கையும், மோதகமும் சற்றுக் கூடுதலாகக் கொடுப்பார்கள். சாமிபிடித்தாடுபவர்களை இப்படிக் கௌரவிப்பார்கள் பூசைக்காரர்கள்.

அம்மனும், பேச்சியம்மனும் சகோதரச் சாமியாம். கைகோர்த்துக்கொண்டு ஆடினார்கள் தானே ? இந்த வயோதிபச் சாமியாடியை கைகோர்த்துக்கொள் ளவில்லை. கோயில் தொங்கல் படையல் வரை போய் கிடந்தாடினார்கள். அந்த வயோதிபச் சாமியாடியை அழைத்துக் கொள்ளவில்லை. சாதிய வக்கிரம் உருக்கொண்ட நிலையிலும் தொலைந்து போகாத ஒன்றோ ? அந்த வயோதிபச் சாமியாடி கூட தன்னுடலில் இப்போது அம்மன் தெய்வம் தானே புகுந்திருக்கிறது. எனவே கோயில் கருவறை வரை சென்றாடலாம் என நினைக்கவில்லை. ஆலய பிரவேசத்தடை உருக்கொண்ட வேளையிலும் நினைவில் நின்றதோ .

"பேட மானிடப் பிறவிகளே அந்தா அந்தப் படிவரை வந்து தயங்கி ஆடிக்கொண்டிருக்கும் வயோதிப மனிசனும் இந்த ஆத்தாவைத்தானே உடலில் சுமந்தாடுகிறான். அவனையும் கோயில் முழுவதும் விடுங்கள் . மகிழ்ந்து ஆடட்டும். . . " என்று அசரீரி. ஆக அம்மன் கூட பேசவில்லை. அப் படியெனில் ஆராய்ச்சி மனோபாவத்திற்கு என்னவிடை கிடைக்கும், இச்சா மியாட்டம், அம்மன் பற்றியெல்லாம் ?

தம்பலகாமம்
தம்பன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒருவாரம்.
## ஆராய்ந்தார்கள்!
## எப்படித்
## தீர்க்கப்போகிறார்கள்?

நன்றியுடன் புதியகலாச்சாரத்திலிருந்து...

கோபன் ஹேகனில் மாநாட்டில் ஐ.நா. சபையால் வெளியிடப் பட்ட தகவல்களில் சிலது

*** இந்த நூற்றாண்டின் ஆரம்பத்தில் யுத்தத்தின் காரணமாக நேரிட்டசாவுகளில் 90 சதவீதமானோர் இராணுவத்தினர். இப்போது 90 சதவீதத்தினர் சாதாரணக்குடிமக்கள்.**

* தாய்லாந்து, இலங்கை, பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகளின் பாலியல் சுற்றுலா மையங்களில் மொத்தம் 5 லட்சம் சிறுமிகள் விபச்சாரத்தில் வேலை செய்கின்றனர்.

* பெண்களுக்கு எதிரான வன்முறை எங்கும் நிரவியிருக்கிறது. ஆனால் பெரும்பாலும் செய்தியாக வெளிவருவதில்லை,
எடுத்துக்காட்டாக, இந்தியாவில் ஆண்டுக்கு 5000 முதல் 9000 வரையிலான வரதட்சிணைக்கொலைகள் நடக்கின்றன. வளரும் நாடுகளில் உள்ள, மனைவிமார்களில் மூன்றில் ஒருபங்கினர் கணவன்மார்களினால் துன்புறுத்தித் தாக்கப்படுகின்றனர். அதேசமயம் உலகம் முழுவதும் 2000 பேரில் ஒரு பெண் கற்பழிக்கப்படுகிறாள். கடந்த பத்தாண்டுபோர்களினால் 15 லட்சம் குழந்தைகள் கொல்லப்பட்டனர். இன்று 50 லட்சம் குழந்தைகள் அகதிகள் முகாம்களில் வாழுகின்றனர். 120 லட்சம் பேர் தமது வீடுவாசல் , குடும்பம் அல்லது இரண்டையும் இழந்தனர்.

* அரசியல் அகதிகளாகவும், தேசிய இனமோதல்களுக்குப் பலியானவர்களாகவும் எல்லை கடந்து ஓடுபவர்களின் எண்ணிக்கை 1970 களின் இறுதியில் 80 லட்சமாக இருந்தது. இப்போது 2 கோடியாகிவிட்டது. மேலும் ஒரு 260 லட்சம் பேர் உள்நாட்டுக்குள்ளேயே இடம்பெயர்ந்துள்ளார்கள்.

* உலகநாடுகளில் சுமார் 40 சதவீதமானவை குறைந்தது 5 தேசிய இனமக்களைக் கொண்டுள்ளன. மொத்தநாடுகளில் பாதியளவுக்காவது தேசியஇனங்களுக்கிடையிலான ஏதாவது வடிவிலான மோதலைச்சந்தித்து வருகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* பரம ஏழைகளான 200 கோடிப்பேர் சம்பாதிக்கும் மொத்தவருவாயின் அளவுக்கு வளர்ந்த நாடுகள் தமது இராணுவ அதிகாரத்திற்காகச் செலவிடு கின்றனர்.

* இராணுவத்திட்டங்களுக்காக ஆண்டுக்கு 2, 40, 000 கோடிரூபாய் -அதாவது உலக மக்களில் பாதிப்பேருடைய வருவாய்க்குச்சமமாக -செலவிடப்படும் உலகில், 100 கோடி மக்களுக்கு அடிப்படை சுகாதார வசதி கிடையாது; வயது வந்தோரில் நான்கு பேரில் ஒருவருக்கு எழுதப்படிக்கத்தெரியாது. உலகின் மக்கள் தொகையில் ஐந்தில் ஒரு பங்கினர் ஒவ்வொருநாளும் பட்டினி கிடக்கின்றனர்.

* கடந்த பத்தாண்டு போர்களில் 15 லட்சம் குழந்தைகளுக்கு மேல் கொல் லப்பட்டனர். இன்று 50 லட்சம் குழந்தைகள் அகதிகள் முகாமில் வாழுகின் றனர். 120 லட்சம்பேர் தமது வீடு, வாசல் குடும்பம் அல்லது இரண்டையும் இழந்தனர்.

பூமியில் வாழும் 115 பேருக்கு ஒருவர் வீதம் குடிபெயர்ந்தோ, அகதியா கவோ பொருளாதாரம், அரசியல் அல்லது இராணுவக் காரணங்களால் தமது வீட்டைவிட்டு ஓடும்படி நிர்ப்பந்திக்கப்படுகிறார்.

70 நாடுகளில் வாழும் 30கோடி பூர்வகுடிமக்கள் கடுமையான பாரபட்சத் தையும், வன்முறையையும் அடிக்கடி சந்திக்கிறார்கள். சான்றாக, கனடாவில் பிற கனடியர்களைப் போல ஆறுமடங்கு அதிகமாக பூர்வகுடியினர் கொலை செய்யப்படநேர்கிறது. வெனிசுலாவில் எஞ்சி உயிர் பிழைத்திருக்கும் பத்தாயி ரம் யானோமாமிகள் பொருளாதார, சுற்றுச்சூழல் சுரண்டலுக்குப்பலியாகி முற்றாக அழிந்து போகும் நிலையிலுள்ளனர்.

1994 ஏப்ரல் - ஜூலை ஆகிய நான்கு மாதங்களில், ருவாண்டா நாட்டுமக் கள் தொகையில் பாதியான 35 லட்சம் பேர் பழங்குடி மோதலினால் கொல் லப்பட்டார்கள் அல்லது வீடுகளை விட்டுத்துரத்தப்பட்டார்கள்.

தொழில்மயமான நாடுகள் : தொழில்மயமான 24 பெரிய நாடுகளில் 10 பேருக்கு ஒருவர் வேலையற்றவர்.

வளரும் நாடுகளில் ; வளரும்நாடுகளின் மொத்தமக்கள் தொகையில் 60 சதவீதமானவர் கிராமப்புறங்களில் வாழுகின்றனர். அவர்கள் தமது வாழ்க் கைக்கு முதன்மையாக விவசாயத்தையே சார்ந்துள்ளனர்.

சமீப ஆண்டுகளில் ஏற்றுமதிக்கான விளைபொருட்களின் விலைகள் கணிசமானஅளவு குறைந்துவிட்டபோதும், பொருளாதாரத்தின் மிகுநிலைத் துறை என்கிற முறையில் விவசாயம்தான் உழைக்கும் சக்திகளில் பெருமளவைக் கொண்டிருக்கிறது. அதுதான் நிகரஉள்நாட்டு உற்பத்தியில் சராசரியாக 40 சதவீதத்தை தருகிறது.

விளிம்பு நிலைத் தொழிலாளர்கள் : சுமார் 30 கோடிமக்கள்; அவர்களில் பெரும்பான்மையோர் வளரும் நாடுகளின் பெண்கள்; கைக்கும், வாய்க்கும் கூட பற்றாக்குறை நிலையில் வாழுகின்றனர். அவர்கள் சமூகப்பாதுகாப்பு, காப்பீடு, ஊனமடைந்தாலோ, ஓய்வடைந்தாலோ பலனளிக்கும் திட்டங்கள் ஏதும் இல்லாத முறைசாராத்துறைகளில் வேலை செய்கிறார்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாஷா (Sacha) விற்கு நன்றி

சாஷா (Sacha) மூலம் இப் பின்அட்டைப்படங்கள் கிடைத்தன. தன்னால் முடிந்தபோது கிரோச்சியா (KRO-RATIEN) பகுதியில் அமைந்திருக்கும் பொஸ்னியா (BOSN-IEN) அகதிகளுக்கான அகதிமுகாம்களுக்குக்குச் செல்கிறார். சுவீஸ் பிரசையான இவர் இதுவரை ஐந்து தடவைகள் "SUNCOKRET " என்னும் சமூகசேவை நிறுவனத்துடன் இணைந்து அகதிகளுக்காக உதவிப்பணி புரிந்திருக்கிறார். பிரயாணச்செலவு உட்பட கைச்செலவுப் பணத்தை தான் வேலை செய்து கொள்வதன் மூலம் பெற்றுக்கொள்கிறார். அவரோடு உரையாடும்போது தான் மீண்டும் அங்கு செல்ல எண்ணியிருப்பதாக கூறினார்.

அங்கு குழந்தைகளின் சிரிப்பைக் காணும்போது சாஷா (Sacha) புரிந்துகொள்வதெல்லாம் அவரது பணி ஒன்றும் முழுவதும் பிரயோசனமில்லாத ஒன்றாக இருக்காது என்றே, 28. 5. 94 இல் பத்திரிகையொன்றுக்கு சாஷா(Sacha) இவ்வாறு கூறியிருந்தார். அதாவது "அந்த உண்மையான சிரிப்பு எங்கள் தொண்டுபணியை எத்தகைய முக்கியத்துவம் கொண்டவையாகக் காட்டுகிறது. தொடர்ந்தும் அந்தஅகதிமக்களோடும், அக்குழந்தைகளோடும் ஒன்றாகப்பணிபுரியவேண்டும். ஒரேநேரத்தில் நம்பிக்கையும் இணைவும் அச்சிரிப்புகளிலிருந்து மேலோங்குகிறது." அவரது உதவிப்பணியை நாமும் பாராட்டுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மதப்பிரச்சாரம்

(பதிவேட்டிலிருந்து நாகதிலகன்)

எங்களை விடுவதாக இல்லை இலங்கையரை குறிவைத்த மதப்பிரச் சாரம். ஒவ்வொரு குடியிருப்புகளிலும் எம்மவர்களைத் தேடுகிறார் கள். சற்று அவர்கள் சொல்வதைக் கேட்டு உரையாடத் தொடங்கினால் சிலநாள் இடைவெளியில் மீண்டும் கதவைத் தட்டுகிறார்கள்.

தீண்டத்தகாதவர்கள் என ஒருசாராரை ஒதுக்கும் சமூகக்கூடாரம் தானே இலங்கை தமிழ்ச்சமூகம். அதன் நெருக்குவாரம் தானே அந்நியர் ஆண்டபோது மதமாற்றம் என்பதையெல்லாம் தமிழ் கற்று மதப்பிரச்சாரம் செய்யும் வெள்ளைஇன யெகோவாவினர் அறிந்திராமல் இருப்பார்களா..?

அல்லது மூடநம்பிக்கை கொண்டவர்கள், பகுத்தறியும் கல்வியறிவு இல்லாதவர்கள், பின்தங்கிய மூன்றாம் உலகநாடொன்றைச் சேர்ந்தவர் கள் என்றெல்லாம் கருதுகிறார்களோ. அதனால்தானோ என்னவோ இங்கு எம்மவர் வசிப்பிடங்களை சுத்துகிறார்கள் என எண்ணத் தோன் றுகிறது.

என்னதான் என்றாலும் எம்மவர் பலர் மதப்பிரசங்கிகளாக வளர்ச்சி கண்டு சுவீஸ் நாட்டின் புகையிரதநிலையம், தெருக்கள் என எம்மவர் களையே துரத்துகிறார்கள்.

இவர்கள் சொல்லும் கதை, யுத்தத்தால் குவியும் மனிதப்பிணம், சமூகச் சீரழிவு, கொடியநோய்கள், பட்டினிச்சாவு, இயற்கை அனர்த் தங்கள் எங்கு நடந்தாலும் தேவனின் வருகை அண்மித்துவிட்டதாக சொல்லுகிறார்கள். மெல்லுகிற வாய்க்கு அவல் கிடைத்தது போல்..! இவற்றைத்தான் மீண்டும் மீண்டும் மெல்லுகிறார்கள்.

பின் அட்டைப்படம்

பொஸ்னியக் குழந்தைகளை மகிழ்விக்க சுவர்களில் வளர்ந்தது. அங்கு அகதிமுகாமில் இருக்கும் பெரியவர்கள் தமக்குத் தெரிந்ததை வைத்து அடித்தளமிடுகிறார்கள். ஆனால் அதற்கு வர்ணம் தீட்டி பூரணசந்திரன்போல் பிரகாசம் பெறச் செய்வதெல்லாம் குழந்தைகள் தான் என ஷாசா (Sacha) கூறும்போது ஆச்சரியமாகவும், மகிழ்ச்சியாகவும் இருந்தது.

இதனால் குழந்தைகளின் சிந்தனை விரிவுகொள்ளும், யுத்தஅவலநிலையில் அவர்களது உளப்பாதிப்புக்கள் சற்றுதணியவும் கூடும். எம்நாட்டுஅகதிமுகாம் களிலும் இப்படி நிகழ்கிறதா..? நிகழ்ந்தால் நல்ல அம்சம். இல்லாவிட்டால் யார் தொடங்குவார்..?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அச்சுக் கலை

பிரணத்துக்கு

எங்கள்

வாழ்த்துக்கள்

பி. கே. அஜேந்தன்
பி. கேசவானன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org